# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.35/2024** **நாள் : 25.03.2024**

## சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, குடிநீர் கட்டணங்களை நுகர்வோர்கள் செலுத்துவதற்கு ஏதுவாக 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10:00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை அனைத்து வசூல் மையங்களும் இயங்கும்

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியினையும், குடிநீர் கட்டணங்களையும் மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் நுகர்வோர்கள் செலுத்திட வேண்டும்.

அனைத்து பகுதி அலுவலகங்கள் / பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அனைத்து வேலை நாட்களிலும், சனிக்கிழமைகளிலும் இயங்கி வருகிறது. இந்நிலையில், நுகர்வோர்கள் வரி செலுத்துவதற்கு ஏதுவாக 31.03.2024 **(ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10:00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை** அனைத்து பகுதி அலுவலகங்கள் / பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் இயங்கும்.

சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை காசோலை (Cheque) மற்றும் வரைவோலைகளாக (Demand Draft) செலுத்தும் நுகர்வோர்களின் வசதிக்காக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் பணிமனை அலுவலகங்களில் காசோலை / வரைவோலை பெறுவதற்கான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் நுகர்வோர்கள் தங்களது நிலுவை தொகையினை https://bnc.chennaimetrowater.in/#/public/cus-login என்ற வலைத்தளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக பணம் செலுத்தலாம். இ-சேவை மையங்கள் மற்றும் UPI, QR குறியீடு, PoS போன்ற கட்டண முறைகளையும் பயன்படுத்தி

நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, குடிநீர் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 31.03.2024க்குள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்**
**கழிவுநீரகற்று வாரியம்**

**சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள**
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater